


14.06.2025

தலைப்பு செய்திகள்

- சைப்ரஸ் கனடா குரேசியா நாடுகளுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி 5 நாள் அரசு முறை பயணமாக நாளை புறப்படுகிறார்.
- உலக மக்கள் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்ற இந்தியாவின் விருப்பத்தை யோகா பிரதிபலிப்பதாக மத்திய ஆயுஷ் இணை அமைச்சர் திரு.பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.
- இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவு தேர்வு முடிவுகள் இன்று வெளியாயின.
- மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் இன்று முக்கொம்பு வந்தடைந்தது.
- டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி பணிகள் தொடங்கின.
- நீலகிரி கோவை திருநெல்வேலி தென்காசி கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கன அதி கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

**********

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 5 நாள் அரசு முறை பயணமாக சைப்ரஸ், கனடா, குரேசியா நாடுகளுக்கு நாளை புறப்படுகிறார்.

சைப்ரஸ் அதிபர் நிக்கோஸ் கிறிஸ்டோ டௌலிடஸின் அழைப்பை தமது பயணத்தின் முதல் கட்டமாக நாளை அங்கு செல்லும் பிரதமர், அதிபருடனும் வர்த்தக தலைவர்களுடனும் லிமசால் நகரில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இப்பயணம் இந்தியா சைப்ரஸ் நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்தி ஐரோப்பிய யூனியனுடனான நட்புறவை முன்னெடுத்துச்செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமது பயணத்தின் இரண்டாவது கட்டமாக கனடா செல்லும் பிரதமர் நாளை மறுநாள் அங்கு தொடங்க உள்ள ஜி-7 உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

ஜி-7 உறுப்பு நாட்டு தலைவர்களுடன் எரிசக்தி தொழில்நுட்பம், படைப்பாற்றல் திறன், செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் சார்ந்த அம்சங்கள் குறித்து பிரதமர் விவாதிக்க உள்ளார்.

தொடர்ந்து தனது பயணத்தின் 3ஆவது கட்டமாக வரும் 18ஆம் தேதி பிரதமர் குரேசியா செல்கிறார்.

குரேசியா நாட்டிற்கு இந்திய நாட்டு பிரதமர் செல்வது இதுவே முதல் முறையாகும்.

இந்த பயணத்தின் முக்கியத்துவத்தை குறிக்கும் வகையில் பிரதமர் குரேசியா பிரதமர் ஆன்ட்ரஜ் பிளன்கோவிச்சையும்,

அதிபர் ஸோரன் மிலனோவிச்சையும் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

**********

விமான விபத்து

அஹமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 254 ஆக அதிகரித்துள்ள நிலையில் மத்திய உள்துறை இணை அமைச்சர் ஹர்ஷ் சங்வி காந்திநகரில் DNA பரிசோதனை நடைமுறைகளை இன்று ஆய்வு செய்தார்.

இதனை தொடர்ந்து தடயவியல் நிபுணர்களுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் குஜராத்தில் உள்ள 36 தடயவியல் நிபுணர்கள் DNA பரிசோதனைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

இவர்களுக்கு உதவும் வகையில் மத்திய அரசும் தடயவியல் வல்லுநர் குழுவை அனுப்பிவைத்திருப்பதாக தெரிவித்தார்.

இதனிடையே மத்திய உள்துறை செயலர் தலைமையிலான உயர்மட்ட விசாரணை குழு இத்தகைய விபத்துகள் எதிர்காலங்களில் நிகழாவண்ணம்

தடுப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் வழங்க மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

**********

ஏ.பி.சிங்

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து ஆபரேசன் சிந்தூர் துல்லிய ராணுவ நடவடிக்கை இந்திய விமான படையின் தன்னிகரற்ற வலிமையை பறைசாற்றுவதாக இதன் தலைவர் ஏர் சீப் மார்ஷல் ஏ.பி.சிங் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத் துண்டிகல் விமான படை பயிற்சி மையத்தில் ஒருங்கிணைந்த பயிற்சி நிறைவு அணிவகுப்பில் இன்று பங்கேற்ற அவர் நமது ராணுவத்தின் ஒருங்கிணைந்த ஆற்றலை இது பறைசாற்றியதாக எடுத்துரைத்தார்.

**********

அர்ஜுன் ராம் மெஹ்வால்

சவாலான பிரச்சனைகளுக்கு பேச்சுவார்த்தை, தீர்வாயம், சமரசம் உள்ளிட்ட மாற்று வழிகளில் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சட்டம் நீதியியல் துறை அமைச்சர் திரு.அர்ஜுன் ராம் மெஹ்வால் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இதுதொடர்பான மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், இதன்மூலம் நீதிமன்றங்களின் சுமை வெகுவாக குறையும் என்றார்.

நடுவர் மன்றத்தின் மூலம் தீர்வுகள் எட்டப்படுவது மிகவும் பயனளிக்கும் என்று சுட்டிக்காட்டிய அவர் இதற்கான மையமாக நம் நாட்டை உருவாக்குவதே இம்மாநாட்டின் இலக்கு என்றார்.

பொது துறை நிறுவனங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு நடைமுறைகளை வலுப்படுத்தி ஆக்கப்பூர்வமான சூழலை ஏற்படுத்துவது தொடர்பான விவாதங்கள் இந்த ஒருநாள் மாநாட்டில் நடைபெறுகின்றன.

**********

பிரதாப் ராவ் ஜாதவ்

உலகம் முழுவதும் மக்கள் நலத்துடன் வாழ வேண்டும் என்ற இந்தியாவின் விருப்பத்தை யோகா பிரதிபலிப்பதாக மத்திய ஆயுஷ் இணை அமைச்சர் திரு.பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் உலகளாவிய யோகா உச்சிமாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசிய அவர் மக்கள் சந்திக்கும் பல்வேறு சவால்களுக்கு தீர்வாக யோகா அமைந்துள்ளது என்றார்.

உலக அமைதிக்கான இந்தியாவின் பரிசாகவும், பாரம்பரிய கலையாகவும் யோகா திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மதம், பாலினம், மொழி எல்லைகளை தாண்டி அனைவருக்கும் பொதுவானது யோககலை என்று கூறிய அமைச்சர் குழந்தைகள் முதல் முதியோர்வரை பயனடைவதாக எடுத்துரைத்தார்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக 33 சதவிகித மக்கள் சர்வதேச யோகா தின நிகழ்வுகளில் பங்கேற்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் மத்திய கலாச்சாரம் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் யோகா பயிற்சியாளர்கள் பங்கேற்றனர்.

**********

மேட்டூர்

மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்பட்டுள்ள தண்ணீர் இன்றுகாலை முக்கொம்பு வந்தடைந்தது.

மேள தாளங்கள் முழங்க பூக்களையும் நெல் மணிகளையும் தூவி விவசாயிகள் தண்ணீரை வரவேற்றனர்.

திருச்சியில் ஒன்றரை லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முக்கொம்பு வந்த தண்ணீர் முழுவதும் காவிரி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது.

இந்த தண்ணீர் இன்று நள்ளிரவு கல்லணை சென்றடையும்.

கல்லணையிலிருந்து காவிரி கொள்ளிடம் கல்லணை கால்வாய் வெண்ணாற்றில் தண்ணீர் பிரித்து அனுப்பப்படும்.

டெல்டா மாவட்டங்களின் கடைமடை பகுதிகளை சென்றடையும் வகையில் ஏற்கனவே தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இந்தாண்டு குறுவை சாகுபடி கூடுதலாக இருக்கும் என்று விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இதனிடையே தஞ்சை திருவாரூர் கும்பகோணம் மயிலாடுதுறை நாகை உள்ளிட்ட டெல்டா பகுதிகளில் 5 லட்சத்திற்கும் மேலான ஏக்கரில் குறுவை சாகுபடிக்கான பணிகளில் விவசாயிகள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து எமது தஞ்சை செய்தியாளர்

வாய்ஸ்

**********

மதிவேந்தன்

தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு நவீன திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக மாநில ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் முப்பத்தி ஏழரை லட்சம் ரூபாய் மதிப்பில் 2 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்களை இன்று திறந்து வைத்து பேசிய அவர், 85 சதவிகித மானியத்தில் கால்நடை காப்பீட்டு வசதி செயல்படுத்தப்பட்டு வருவதால், பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்து வருவதாக கூறினார்.

தூய பால் உற்பத்தி, மரபு வழி மூலிகை மருத்துவம் மற்றும் பால்பண்ணை தொழில்நுட்பங்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

**********

லோக் அதாலத்

தமிழகத்தில் லோக் அதாலத் மக்கள் நீதிமன்றம் இன்று நடைபெறுகிறது.

காசோலை முறைகேடுகள், ஜீவநாம்சம், வாகன விபத்து இழப்பீடு, குடும்ப நல வழக்கு உள்ளிட்டவற்றிற்கு சமரச முறையில் தீர்வு காணும் வகையில் இந்நடவடிக்கை.

விழுப்புரம் மாவட்ட முதன்மை நீதிபதி மணிமொழி தலைமையில் நடைபெற்ற லோக் அதாலத்தில் 2 ஆயிரத்து 189 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு 9 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 103 வழக்குளுக்கு சமரச தீர்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

**********

ரத்த கொடையாளர்கள் தினம்

உலக ரத்த கொடையாளர்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

“பிறருக்காக செயலாற்றுவோம் ரத்தம் வழங்குவோம் உயிர் கொடுப்போம” என்ற இந்தாண்டின் கருப்பொருளுடன் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

தூத்துக்குடியில் உலக ரத்த கொடையாளர் தின பேரணியை தொடங்கிவைத்த சமூகநலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் ரத்த கொடையால் பல நோயாளிகள் காப்பாற்றப்பட்டு வருவதாக கூறினார்.

வேலூர் தலைமை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிறப்பு ரத்த தான முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி தொடங்கிவைத்தார்.

மாவட்டத்தில் செயல்படும் ரத்த வங்கிகள் மூலம் 9 ஆயிரம் யூனிட் ரத்தம் சேகரிக்கப்பட்டு பல உயிர்கள் காப்பாற்றப்படுவதாக மாவட்ட ரத்த வங்கி தலைவர் பேராசிரியர் டாக்டர் தீபக் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

**********

மீன்பிடி தடைக்காலம்

தமிழகத்தில் கிழக்கு கடற்கரை பகுதியில் 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் இன்று நள்ளிரவுடன் நிறைவடைகிறது.

இதனையடுத்து ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட கடற்கரை பகுதிகளில் விசைப்படகுகள் கடலுக்கு செல்வதற்கான முன்னேற்பாட்டு பணிகளில் மீனவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நாகை கடற்பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுவதை அடுத்து மீனவர்கள் கடலுக்குள் செல்வதற்கான டோக்கன்கள் வழங்கப்படவில்லை.

கன்னியாகுமரி மாவட்ட கடல் பகுதிகளிலும் பலத்த காற்று வீசி வருவதால் குளச்சல், சின்னமுட்டம், கோவளம், மணக்குடி பகுதிகளில் உள்ள நாட்டு படகு மீனவர்கள் இன்று கடலுக்குள் மீன்பிடிக்க செல்லவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

நீட் நுழைவு தேர்வு முடிகள்

நாடுமுழுவதும் MBBS BDS மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவு தேர்வு முடிவுகள் சற்றுமுன் வெளியாகின.

தேர்வர்கள் neet.nta.nic.in என்ற இணையதளத்தில் முடிவுகளை தெரிந்துகொள்ளலாம்.

கடந்த 4 ஆம் தேதி நடைபெற்ற இத்தேர்வை நாடுமுழுவதும் 23 லட்சம் மாணாக்கரும்,

தமிழகத்திலிருந்து ஒன்றரை லட்சம் மாணாக்கரும் எழுதினர்.

**********

தேர்வு

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப் 1 மற்றும் குரூப் 1ஏ தேர்வுகள் நாளை நடைபெறுகின்றன.

துணை ஆட்சியர், காவல் துணை கண்காணிப்பாளர் உள்ளிட்ட பணியிடங்களுக்கான இத்தேர்வை மாநிலம் முழுவதும் சுமார் இரண்டரை லட்சம் பேர் எழுதுகின்றனர்.

திருச்சி மாவட்டத்தில் 37 மையங்களில் நடைபெறும் இத்தேர்வை 10 ஆயிரத்து 42 பேர் எழுத உள்ளனர்.

**********

பொதுவிநியோக திட்ட குறைதீர் முகாம்

தமிழகம் முழுவதும் பொதுவிநியோக திட்ட குறைதீர் முகாம் இன்று நடைபெறுகிறது.

இதில் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல் நீக்கம் உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக மனு அளித்து பயன்பெறலாம்.

**********

இருவரி

திருவண்ணாமலை மாவட்டம் மேல்கச்சராப்பட்டியில் பிரதமரின் ஜன்மன் திட்டத்தின் கீழ், இரண்டரை கோடி ரூபாய் மதிப்பில் பழங்குடியின மக்களுக்கான வீடு கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தர்ப்பகராஜ் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அரசின் பதிவு பெற்ற இருப்பு கிடங்குகளிலிருந்து சாதாரண வகை கற்கள், ஜல்லி, செயற்கை மணல் ஏற்றிச் செல்ல உரிய அனுமதி கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**********

வானிலை

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி மாவட்டத்தில் கன முதல் அதி கன மழையும்

கோவை திருநெல்வேலி தென்காசி கன்னியாகுமரி மாவட்டங்களில் கன முதல் மிக கன மழையும்

திருப்பூர் தேனி திண்டுக்கல் மாவட்டங்களில் கன மழையும் இன்று பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், தென் தமிழகம் மன்னார் வளைகுடா குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் நாளை மறுநாள் வரை மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

**********

நெல்லை

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கனமழை காரணமாக மணிமுத்தாறு அருவி மற்றும் களக்காடு தலையணையில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

**********

கிரிக்கெட்

உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன் பட்டத்தை வெல்ல தென்னாப்பிரிக்கா 69 ரன்கள் மட்டுமே எடுத்தாக வேண்டும்.

லண்டன் லார்ட்ஸ் 3-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் நேற்று ஆஸ்திரேலியாவிற்கு எதிராக தென்னாப்பிரிக்கா தனது 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்பிற்கு 213 ரன் எடுத்திருந்தது.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர்

ஆஸ்திரேலியா 212

தென்னாப்பிரிக்கா 138

இரண்டாவது இன்னிங்ஸ் ஸ்கோர்

ஆஸ்திரேலியா 207

4 ஆம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் தொடர்ந்து நடைபெறும்.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

**********